காஞ்சியை 1-ம் நூற்றாண்டில் தொண்டைமான் இளந்திரையன் ஆண்டதாக பெரும்பாணாற்றுப்படையில் கடியலூர் உருத்திரங்கண்ணனார் விவரிக்கிறார். மதில்கள்சூழ் பெருநகராகவும், அந்தணர், வணிகர்கள் நிறைந்த இடமாகவும், அங்காடி வீதி நிறைந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்க இலக்கியங்களில் பெரும்பாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி ஆகியன காஞ்சியின் செல்வச் செழிப்பை வர்ணிக்கின்றன. அங்கு நடந்த கடல் கடந்த வாணிபம், பல மொழி பேசும் மக்கள் வாழ்ந்த விதம் போன்றவை சங்க காலப் பாடல்களில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி திருவொற்றியூர் சூரை மீன்பிடி துறைமுகத்தில் கடலுக்குள் சென்று தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதில் ஆட்சியர் பிரதாப், ஆவடி மாநகராட்சி ஆணையர் ரா.சரண்யா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி

கடலுக்குள் சென்று தேர்தல் விழிப்புணர்வு

திருவொற்றியூர்

100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி, திருவொற்றியூர் சூரை மீன்பிடி துறைமுகத்தில் கடலுக்குள் சென்று தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

திருவொற்றியூர் தொகுதிக்கு உட்பட்ட திருவொற்றியூர் சூரை மீன்பிடி துறைமுகத்தில் ‘தேர்தல் திருவிழா - தமிழ்நாட்டின் பெருவிழா’ - சட்டப்பேரவை தேர்தல்-2026-ஐ முன்னிட்டு 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் விதமாக திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணைந்து விழிப்புணர்வு ஏற்படுத்தின.

இதில் மாவட்ட தேர்தல் அலுவலர் பிரதாப் உள்ளிட்டோர், 10-க்கும் மேற்பட்ட வெளிப்புற நீர் விளையாட்டு துடுப்பு பலகையில் தேர்தல் விழிப்புணர்வு கொடிவைத்து, 3 விசைபடகு மற்றும் மீனவ நாட்டு படகுகளில் கடலுக்குள் சென்று தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் முன்னதாக 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் விதமாக மாவட்ட தேர்தல் அலுவலர் தலைமையில் அனைவரும் வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். மேலும் பல்வேறு மீனவ சங்க பிரதிநிதிகளுக்கு தேர்தல் விழிப்புணர்வு சால்வைகளை அணிவித்து தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

முன்னதாக வல்லூர் அனல் மின் நிலைய கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர் தலைமையில் அதிகமான வாக்குச்சாவடி மையங்களை கொண்ட சட்டப்பேரவை தொகுதிகளின் தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஆவடி மாநகராட்சி ஆணையர் ரா.சரண்யா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் வை.ஜெயக்குமார், ஊரக வளர்ச்சி செயற்பொறியாளர் சு.தணிகாசலம், ஊராட்சிகள் மற்றும் தணிக்கை உதவி இயக்குநர் யுவராஜ், மீன்வளத் துறை உதவி இயக்குநர் அஜய் ஆனந்த், திருவொற்றியூர் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் பத்மநாபன், 200-க்கும் மேற்பட்ட மீனவ சங்க பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

நடிகர் விஜய் - சங்கீதா விவகாரத்து வழக்கு விசாரணையில்

ஆன்லைன் மூலம் ஆஜராக விஜய் சார்பில் மனு

செங்கல்பட்டு

நடிகர் விஜய் - சங்கீதா விவகாரத்து வழக்கு தொடர்பாக ஏப்.20-ம் தேதி நடைபெறும் விசாரணையில், ஆன்லைன் மூலம் ஆஜராக நீதிமன்றத்தில், விஜய் சார்பாக மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தவெக தலைவர் விஜய் - மனைவி சங்கீதா விவகாரத்து கோரி பிப்.24-ம் தேதி செங்கை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். வழக்கு செங்கல்பட்டு குடும்ப நல நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டு விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. சங்கீதா தொடர்ந்த இந்த வழக்கில் ஏப்.20 ல் நேரில் ஆஜராக வேண்டும் என விஜய்க்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. அன்று சங்கீதா நேரில் ஆஜராவார் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், விவாகரத்து வழக்கு விசாரணை முடியும் வரை, சென்னை நீலாங்கரையில் உள்ள தங்களுக்குச் சொந்தமான இல்லத்தில் தொடர்ந்து வசிக்க அனுமதிக்க வேண்டும் என்று சங்கீதா நீதிமன்றத்தில் இடையீட்டு மனுவை தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவும் விசாரிக்கப்படலாம் என தெரிகிறது.

இந்நிலையில் கடந்த 17-ம் தேதி விஜய் தரப்பில், ஆன்லைன் மூலம் விசாரணைக்கு ஆஜராக நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தேர்தலில் போட்டியிடுவதால் தேர்தல் பணி இருப்பதாலும் பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டும் என்பதாலும் திங்கள்கிழமை நடக்கும் வழக்கில் ஆன்லைன் மூலம் ஆஜராவதாக விஜய் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தி.நகரில் லலிதா ஜுவல்லரியின் 2-வது ஷோரூம்

சென்னை

தென்னிந்தியாவின் முன்னணி நகைக் கடையான லலிதா ஜுவல்லரி சென்னை தி.நகரில் தனது இருப்பை மேலும் வலுப்படுத்தும் விதமாக, அதன் முதல் ஷோரூம் அருகில், அதே வளாகத்தில் தனது 63-வது ஷோரூமை ஏப்.20-ம் தேதி அட்சய திருதியை நாளில் தொடங்குகிறது.

சென்னை நகை உலகம் இதுவரை கண்டிராத மிக மிக பிரத்யேக ரகங்களை இப்புதிய ஷோரூமில் அறிமுகப்படுத்துகிறது லலிதா ஜுவல்லரி, தனித்துவமான டிசைன்கள் இந்த புதிய ஷோரூமின் சிறப்பு அம்சமாக விளங்கும்.

அதிக இடவசதி மற்றும் ஏராளமான ரகங்களுடன் அமைந்துள்ள இந்த ஷோரூமில் பாரம்பரியமான நகைகள் முதல் நவீன டிசைன்கள் வரை அனைத்தும் கிடைக்கும்.

அட்சய திருதியை தினத்தை முன்னிட்டு இந்த புதிய கிளையில் சிறப்பு சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அனைத்து தங்க நகைகளுக்கும் சேதாரம் 1 % குறைவு. வைர நகைகளுக்கு ஒரு கேரட்டுக்கு ரூ.4,000 தள்ளுபடி. தங்க நாணயங்களுக்கு சேதாரம் கிடையாது. 90 % வெள்ளிப் பொருட்களுக்கு சேதாரம் மற்றும் செய்கூலி கிடையாது.

இச்சலுகை தொடர்பாக லலிதா ஜுவல்லரியின் நிர்வாக இயக்குநர் டாக்டர் எம்.கிரண்குமார் கூறும்போது, “லாபத்தை விட வாடிக்கையாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டுள்ளோம். மக்களின் ரசனைக்கேற்ப பிரத்யேக வடிவமைப்புகளை இங்கு கொண்டு வந்துள்ளோம். லலிதா ஜுவல்லரியின் தனிச்சிறப்பே அதன் வெளிப்படைத் தன்மைதான். வாடிக்கையாளர்கள் மற்ற கடைகளுடன் விலையை ஒப்பிட்டுப் பார்க்க விரிவான எஸ்டிமேட் ஸ்லிப் பெறலாம். நகைகளை மொபைலில் புகைப்படம் எடுத்துக் கொள்ளலாம். இங்குள்ள அனைத்து வைரங்களும் இ.எஃப் கலர் கிரேடு மற்றும் விவிஎஸ்1 /விவிஎஸ் கிளாரிட்டி கொண்டவை. சர்வதேச தரச் சான்றிதழ்களுடன் இவை விற்பனை செய்யப்படுகின்றன. பழைய நகைக்ளுக்கு 100 % எக்ஸ்சேஞ்ச் மதிப்பும் வழங்கப்படுகிறது” என்றார்.

கூடுதல் விபரங்களுக்கு 8925990421 / 22 ஆகிய எண்களைத் தொடர்பு கொள்ளலாம்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

மணப்பந்தல்

திருமண சேவை மையம்

சிறந்த திருமண வரன்களுக்கு, Sivin Tamil Matrimony App (Play Store). பதிவு இலவசம், 6 மாத சந்தா ரூ.2699. போன் :9677262648, 9840986863

மணமகள் தேவை

தமிழ்

சைவப்பிள்ளை திருநெல்வேலி, 41 வயது, 2-வது திருமணம். வசிக்குமிடம் திருநெல்வேலி. Railway Engineer, Central Govt. Ph: 63837 26368

மணமகன் தேவை

தமிழ்

Parents of Tamil Muslim doctor girl, doing PG (2nd year), 27yrs, 160cm, smart, reputed family, seek matching proposal from parents of doctor groom only. 9489465536.

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

NAME CHANGE

I, Jiyah Bhandari D/o. Lakshman Bhandari, residing at Flat No. B1001, B Block, Kushal Das Garden Apts, No. 448, Poonamallee High Road, Kilpauk, Chennai 600010, My name in Aadhar & School is as Jiyah Bhandari and my name in my passport is Jiyah Lakshman Bhandari. Both names are same and my correct name is Jiyah Bhandari for all purposes. This is application of Passport to the concern authority. It is true and best to my knowledge & belief.

ஆட்கள் தேவை

பொது

Civil Engineers/ Draftsmen / Quantity Surveyor /Interior/ Architect/ Computer Operator- 12th Standard / Graduate. Email : archjobs0001@gmail.com / 9840320001

வாக்கு எண்ணும் மையத்தில் ஆட்சியர் ஆய்வு

காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் வாக்கு எண்ணும் மையத்தில் மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான சினேகா ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் தேர்தல் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, வாக்குப்பதிவு முடிந்தவுடன் வாக்கு இயந்திரங்கள் பாதுகாப்பாக வைக்கப்படவுள்ள வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளை மாவட்ட தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சியருமான சினேகா நேற்று ஆய்வு செய்தார்.

காஞ்சிபுரம் பொன்னேரிக்கரை பகுதியில் அமைந்துள்ள அண்ணா பல்கலைக் கழக பொறியியல் உறுப்புக் கல்லூரியில் வாக்கு எண்ணும் மையம் அமைக்கப்பட்டுள்ளது.

அங்கு அமைக்கப்பட்டுள்ள 'ஸ்ட்ராங் ரூம்' எனப்படும் பாதுகாக்கப்பட்ட அறைகள், கண்காணிப்பு கேமராக்களின் செயல்பாடுகள் மற்றும் கட்டுப்பாட்டு அறையின் பாதுகாப்பு வசதிகள் குறித்து ஆட்சியர் விரிவாக கேட்டறிந்தார்.

காஞ்சிபுரம் வாக்கு எண்ணும் மையத்தில் ஆய்வு செய்கிறார் ஆட்சியர் சினேகா. உடன் சார்–ஆட்சியர் ஆஷிக் அலி.

குறிப்பாக, வேட்பாளர்களின் முகவர்கள் மற்றும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடும் காவலர்கள் தங்குவதற்கான வசதிகள், தடையில்லா மின்சாரம் மற்றும் இணையதள வசதி உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாக அவர் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, காஞ்சிபுரம் சட்டப்பேரவைத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், காஞ்சிபுரம் சார் ஆட்சியருமான ஆஷிக் அலி, தேர்தல் பிரிவு அலுவலர்கள் உடனிருந்தனர்.

வாக்கு எண்ணும் மையத்தில் மூன்றடுக்கு பாதுகாப்பு வழங்கவும், எவ்வித சுணக்கமுமின்றி கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் ஆட்சியர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். பணிகள் அனைத்தும் சிறப்பாக நடைபெற ஒத்துழைக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

காஞ்சிபுரத்தில் காவல் துறையினர் தபால் வாக்குப்பதிவு

காஞ்சிபுரம்

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு, காஞ்சிபுரம் மாவட்டத்தில் தேர்தல் பணிகளில் ஈடுபட உள்ள காவல்துறையினருக்கான தபால் வாக்குப்பதிவு நேற்று நடைபெற்றது. இந்த மையத்தில் மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான சினேகா ஆய்வு செய்தார்.

காஞ்சிபுரம் மாவட்ட மக்கள் நல்லுறவு மையக் கூட்டரங்கில் காவல்துறையினருக்கான தபால் வாக்குப்பதிவு மையம் அமைக்கப்பட்டிருந்தது. இந்தத் தபால் வாக்குப்பதிவில், மாவட்டம் முழுவதும் இருந்து மொத்தம் 857 காவல்துறையினர் ஆர்வத்துடன் வந்து வாக்களித்தனர். அதேபோல் வெளியூர் தொகுதிகளுக்கு 349 பேர் வாக்களித்தனர்.

இதையொட்டி போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. தபால் வாக்கு அளிக்க வந்த காவல்துறையினர், பணியாளர்கள் தங்களின் அலுவலக அடையாள அட்டையைக் காண்பித்த பிறகே மையத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர். இந்தத் தேர்தல் நடைமுறைகளை ஆட்சியர் சினேகா நேரில் பார்வையிட்டு, வாக்குப்பதிவு சுமுகமாக நடைபெறுவதை உறுதி செய்தார். அப்போது வாக்குப்பதிவு மையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் பா.முருகேசன் மற்றும் தேர்தல் பிரிவு அலுவலர்கள் உடன் இருந்தனர். காவல்துறையினர் தங்களின் வாக்குகளைச் செலுத்திய பின், அவை பாதுகாப்பாக சீல் வைக்கப்பட்ட பெட்டிகளில் வைக்கப்பட்டன.

கட்டாய கல்வி உரிமை சட்டத்தின் கீழ் தனியார் பள்ளிகளில் 25 % ஒதுக்கீடு

நாளை முதல் விண்ணப்பிக்க ஆட்சியர் அழைப்பு

திருவள்ளூர்

கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் தனியார் பள்ளிகளில் நலிவடைந்த பிரிவினர் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினருக்கான 25 சதவீத ஒதுக்கீட்டுக்கு நாளை முதல் விண்ணப்பிக்கலாம் என திருவள்ளூர் ஆட்சியர் பிரதாப் தெரிவித்துள்ளார்.

கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ், ஒவ்வொரு பள்ளியிலும் நலிவடைந்த பிரிவினர் மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினருக்கு 25 சதவீத இடங்கள் ஒதுக்கப்படும். 2025-26-ம் கல்வியாண்டில் மாநிலத்தின் கல்வி மேலாண்மை தகவல் முறைமை (EMIS) போர்ட்டலில் பதிவு செய்யப்பட்ட எல்.கே.ஜி மற்றும் ஒன்றாம் வகுப்பு மாணவர் சேர்க்கை எண்ணிக்கையின் அடிப்படையில் இடங்கள் கணக்கிடப்படும்.

2026-27-ம் கல்வியாண்டுக்கான காலி இடங்களைக் கணக்கிடும் பணி கடந்த 2-ம் தேதி தொடங்கப்பட்டு விவரங்கள் அந்தந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் நாளை முதல் பெற்றோர் தங்கள் குழந்தைகள் சேர்க்கைக்காக இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஆட்சியர் பிரதாப் வெளியிட்ட அறிக்கை:

திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள சிறுபான்மை, சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் 2026-2027-ம் கல்வி ஆண்டுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு நுழைவு நிலை எல்கேஜி வகுப்பில் 25 சதவீத இட ஒதுக்கீடு அளிக்கப்படுகிறது.

நாளை (ஏப்.20-ம் தேதி) முதல் மே 18-ம் தேதி வரை திருவள்ளூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகம், மாவட்டக் கல்வி அலுவலகம், மாவட்டக் கல்வி அலுவலகம் (தனியார் பள்ளிகள்), வட்டார வள மைய அலுவலகம், தனியார் பள்ளிகள் மற்றும் இ-சேவை மையங்களில், குழந்தைகளின் பெற்றோர் மாணவர் சேர்க்கைக்காக இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

மாற்றுத் திறனாளி வாக்காளர்கள், மூத்த குடிமக்கள்

வாக்குச்சாவடிக்கு செல்ல இலவச வாகனம்

சென்னை

சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: ஏப். 23-ம் தேதி நடைபெறவுள்ள தேர்தலில், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்கள் தங்களது ஜனநாயகக் கடமையை நிறைவேற்ற ஏதுவாக சிறப்பு வாகனச் சேவை வழங்கப்பட உள்ளது.

இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புவோர் *Saksham* செயலி மூலமாகவும், மாவட்ட தகவல் மையத் தொடர்பு எண் 1950 அல்லது மாவட்ட தேர்தல் அலுவலகக் கட்டுபாட்டு அறை எண் 18004257012, மாற்றுத் திறனாளி நல அலுவலர் (சென்னை வடக்கு) பி.சரவண குமார் செல்போன் எண் - 94439 68097, மாற்றுத் திறனாளி நல அலுவலர் (சென்னை தெற்கு) சீனிவாசன் செல்போன் எண் 98416 96693 ஆகிய எண்களை தொடர்பு கொண்டும் பயன்பெற்றுக் கொள்ளலாம்.

மற்றவர் சொத்தின் ஆவணத்தை வைத்து நிதி நிறுவனத்தில்

ரூ.6 கோடி கடன் பெற்ற நபர் கைது

ஆவடி

சென்னையை அடுத்த மாதவரம் அருகே மாத்தூர் பகுதியை சேர்ந்தவர் விநாயகமூர்த்தி, இவர் ஆவடி காவல் ஆணையரகத்தில் புகார் அளித்திருந்தார். அதில், ‘கொரட்டூரை சேர்ந்த இளைய பெருமாள் என்ற நபரிடம் கடன் கேட்டிருந்தேன். இதையடுத்து எனக்கு சொந்தமான மண்டபத்தின் ஆவணங்களை பெற்றுக்கொண்டு அதை பிணையாக வைத்து இளைய பெருமாள் கடன் பெற்று தருவதாக கூறி, அந்த ஆவணத்தை வைத்து தனியார் நிறுவனத்தில் ரூ.6 கோடி கடன் பெற்றுகொண்டு அதை என்னிடம் கொடுக்காமல் மோசடி செய்துள்ளார். அவர் மீது நடவடிக்கை எடுத்து பணத்தையும், ஆவணங்களை பெற்று தர வேண்டும்’ என குறிப்பிட்டிருந்தார்.

இதையடுத்து ஆவடி மத்திய குற்றப்பிரிவு போலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில், இளையபெருமாள், அவரது மனைவி யமுனாவை நேற்று முன்தினம் கைது செய்து, நீதிமன்ற காவலில் சிறையில் அடைத்தனர். தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது.

बैंक ऑफ़ बड़ौदा
பேங்க் ஆப் பரோடா

மண்டல ஒடுக்கப்பட்ட சொத்து மீட்பு கிளை
45, மூர் தெரு, JBAS கட்டிடம், 4வது தளம், சென்னை-600 001, இந்தியா
Ph: 044 -23454 384 / 385 Email: ARMMAS@bankofbaroda.com

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV – A யின்படி (விதி 6 (2) மற்றும் 8 (6) யை பார்க்கவும்)

2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் கீழ் 8(6) & 6(2) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துகளின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு.

கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை **பாங்க் ஆஃப் பரோடா** வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **“எங்கு உள்ளதோ அப்படியே” “எப்படி உள்ளதோ அப்படியே” “என்ன இருக்கிறதோ அதே நிலையில்” “வேறு எந்த தீர்வும் பொருந்தாது”** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்/ ஜாமீன்தாரர்/ அடமானதாரர் விவரம், நிலுவைத் தொகை, சொத்து விவரம், குறைந்த பட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் விவரங்கள்: 1) M/s Vijayalakshmi Traders அலுவலக முகவரி (1): எண்.20, நாகாத்தம்மன் கோயில் தெரு, மேற்கு மாம்பலம், **சென்னை - 600033. அலுவலக முகவரி (2):** எண்.1, S.V. சிதம்பரம் சாலை, ஜாபர்கான்பேட்டை, அசோக் நகர், சென்னை - 600083 **குடோன் முகவரி (3):** எண்.1/14, J.N. சாலை, (I.O.C. பெட்ரோல் பங்க் அருகில்), கிழக்கு குளக்கரை தெரு, திருவள்ளூர் – 602001. **மேலாண்மை பங்குதாரர் / ஜாமீன்தாரர்: 2) திரு. G. சிதம்பரம்** த/பெ. திரு. கணபதி, **முகவரி:** எண்.23A, முல்லை தெரு, சக்தி நகர், ஆதம்பாக்கம் - 600042 **அலுவலகத்தின் முகவரி:** 'J' கார்டன்ஸ், எண்.132, GNT சாலை, பொன்னியம்மன் மேடு, மாதவரம், சென்னை - 600110 **பங்குதாரர்/ ஜாமீன்தாரர் / அடமானதாரர் 3) திருமதி. புவனேஸ்வரி** க/பெ. திரு. இரமேஷ்பாபு H-68, HIG-II, TNHB, 6வது காந்தி சாலை, ஜோதி நகர் அஞ்சல், அரக்கோணம் -631003. **பங்குதாரர்/ ஜாமீன்தாரர் / அடமானதாரர் 4) திரு. C. பாஸ்கரன்** த/பெ. திரு. சொக்கலிங்கம் (சொத்து எண்.1) எண்.59, பிள்ளையார் கோயில் தெரு, கிரிகில்ஸ்பேட்டை, அரக்கோணம் - 631002. **பங்குதாரர்/ ஜாமீன்தாரர் / அடமானதாரர் 5) திரு. M. கணேசன்** த/பெ. திரு. முருகையா (இறந்தவர்) பிரதிநிதியாதன் சட்டப்பூர்வ வாரிசுதாரர்கள் திருமதி. உஷாராணி, திருமதி. சிந்து & திரு. G. அருண், புதிய கதவு எண்.9E, 3வது குறுக்குத் தெரு, கஸ்தூரிபாய் நகர், ஆவடி, சென்னை – 600 054. **பங்குதாரர்/ ஜாமீன்தாரர் / அடமான தாரர் 6) திரு. S. முருகேசன்** த/பெ. லேட் ஸ்ரீராமுலு, கதவு எண்.3/2, 9வது தெரு, காமராஜர் காலனி, கோடம்பாக்கம், சென்னை - 600024. **பங்குதாரர்/ ஜாமீன்தாரர் / அடமானதாரர் 7) திரு. P. நடராஜன்** த/பெ. திரு. பெரியப்பா (சொத்து எண்.2) எண்.9, தண்டபாணி தெரு, வேளச்சேரி, சென்னை - 600042. **பங்குதாரர்/ ஜாமீன்தாரர் / அடமானதாரர், லேட் M. கணேசன் பங்குதாரர் அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுதாரர் 8) திருமதி. உஷாராணி** க/பெ. திரு. M. கணேசன், புதிய கதவு எண்.9E, 3வது குறுக்குத் தெரு, கஸ்தூரிபாய் நகர், ஆவடி, சென்னை – 600 054. **மேலும் ஒரு முகவரி:** எண்.56, முதல் தெரு, காமராஜ் நகர், ஆவடி, சென்னை – 600 071. **லேட் M. கணேசன் பங்குதாரர் அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுதாரர் 9) திருமதி. சிந்து** த/பெ. திரு. M. கணேசன் எண்.56, முதல் தெரு, காமராஜ் நகர், ஆவடி, சென்னை – 600 071. **லேட் M. கணேசன் பங்குதாரர் அவர்களின் சட்டப்பூர்வ வாரிசுதாரர் 10) திரு. G. அருண்** த/பெ. திரு. M. கணேசன், எண்.56, முதல் தெரு, காமராஜ் நகர், ஆவடி, சென்னை – 600 071.

மொத்த நிலுவைத் தொகை: 12-04-2026 அன்றுள்ளபடி ரூ.11,95,02,006.73 + வட்டி + பொருந்தக்கூடிய கட்டணங்கள் /செலவீனங்கள் போன்ற பிற.

சுவாதீனம் நிலை : நேரடி சுவாதீனம்

சொத்தின் விளக்கம்: அரக்கோணத்தில் அமைந்துள்ள தொழிற்சாலை நிலம் மற்றும் கட்டிடம்: அரக்கோணம் பதிவு மாவட்டம் மற்றும் அரக்கோணம் JSRO-1 சார்பதிவு மாவட்டத்திற்குட்பட்ட, வேலூர் மாவட்டம், அரக்கோணம் வட்டம், அம்மனூர் கிராமம் சர்வே எண் பழைய சர்வே எண்.38/2 (பகுதி), 42/B (பகுதி), 47/B (பகுதி) மற்றும் 48 (பகுதி) தற்போது அரக்கோணம் நகராட்சி பதிவு வார்டு-D, பிளாக்-7, T. சர்வே எண்.9 ஆகியவைகளில் அடங்கிய அரக்கோணம், சிட்கோ தொழிற்பேட்டை, ஷெட் எண்.3, இல் அமைந்துள்ள பரப்பளவு 0.287ஏக்கர்கள் விஸ்தீரணம் மற்றும் 12 மீட்டர் X 10 மீட்டர் பரப்பளவு கொண்ட கட்டிடம், நிலம் அதனுடன் கட்டிடம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, எல்லைகள்: வடக்கில்: ஷெட் எண்.2; தெற்கில் : ஷெட் எண்.13; கிழக்கில் : 40அடி சாலை; மேற்கில் : ஷெட் - 4. **[Latitude: 13.073654, Longitude: 79.66688 (தோராயமாக)]**

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 55,00,000/- டேவணித் தொகை ₹ 5,50,000/- ஏல உயர்வு தொகை ₹ 1,00,000/-

வேளச்சேரியில் அமைந்துள்ள குடியிருப்பு நிலம் மற்றும் கட்டிடம்: தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் வேளச்சேரி சார்பதிவு மாவட்டத்திற் குட்பட்ட, சென்னை மாவட்டம், வேளச்சேரி வட்டம், சென்னை மாநகராட்சி எல்லைகளுக்குட்பட்ட, வேளச்சேரி கிராமத்தின் சர்வே எண்.145/1 சென்னை -600042, வேளச்சேரி, தண்டபாணி தெருவில் அமைந்துள்ள பரப்பளவு 3270சதுர அடி விஸ்தீரணங்கொண்ட நிலம் அதனுடன் கட்டிடம் அதனைச் சார்ந்த அனைத்து துண்டு மற்றும் பகுதி, அதனுடன் அதில் அமைந்துள்ள பொருத்திகள் மற்றும் அனைத்து வசதிகள், அனைத்து இதர உபபொருட்கள் உட்பட, பின்வருமாறு மொத்த நிலத்தின் எல்லைகள்: வடக்கில்: திரு. முருகேசன் அவர்களின் உரிமைப்பெற்ற வீடு; தெற்கில்: திரு. பால் அவர்களின் உரிமைப் பெற்ற வீடு; கிழக்கில்: திரு. இராஜு அவர்களின் உரிமைப்பெற்ற மனை; மேற்கில்: தண்டபாணி தெரு; அனைத்தின் கூட்டுப் பரப்பளவு 3270சதுர அடி விஸ்தீரணங்கொண்ட நிலம் மற்றும் கட்டிடம். **[Latitude: 12.984122, Longitude: 80.228794 (தோராயமாக)]**

குறைந்தபட்ச கேட்பு விலை ₹ 1,62,00,000/- டேவணித் தொகை ₹ 16,20,000/- ஏல உயர்வு தொகை ₹ 1,00,000/-

வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கள் : எதுவும் இல்லை

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம்: **22.05.2026**, காலை 11 மணி முதல் மதியம் 2 மணி வரை

விதிமுறைகள் & நிபந்தனைகளை அறிய இங்கு ஸ்கேன் செய்யவும்

மின் ஏல தேதி & நேரம்: **29.05.2026** அன்று மதியம் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்

மேலும் விற்பனைக்கான விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஆன்லைன் விற்பனைக்கான **https://baanknet.com.** இணையதள இணைப்பை பார்வையிடலாம். மேலும் விருப்பமுள்ள ஏலதாரர்கள் அதிகாரப்பூர்வ அதிகாரியை தொலைபேசி:**044-23454384, 23454385** எண்களிலும் தொடர்பு கொள்ளவும்

தேதி : 17.04.2026, இடம்: சென்னை
அதிகாரபூர்வ அதிகாரி, பேங்க் ஆஃப் பரோடா

எமது பதிப்புகள்: சென்னை, புதுவை, வேலூர், கோவை, சேலம், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை, பெங்களூரு, திருவனந்தபுரம்

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859-860, Anna Salai, Chennai 600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by Ra.Babu Vijay at THG PUBLISHING PVT.LTD. Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist.Pin: 603209, Editor: V. Venkateswaran (Responsible for selection of news under the PRP Act).